குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.249/2023

அ.சா. 8

2025–ம் ஆண்டு அக்டோபர் 14–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 0–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நல்லதம்பி | தொழில் | |
| தந்தை பெயர் | மாணிக்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.26 மணி,

Accused A1)Gnanasekaran, A2) Nandhivarman are present. Advocate Mr.KK.Madeswaran present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓலைப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சஞ்சய் எனது அண்ணன் மகன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் அ.சா.1–ன் பெற்றோர்கள் சுற்றுலா சென்றிருந்தார்கள். சஞ்சய் வீட்டின் பக்கத்தில் குடியிருக்கும் சரவணன் என்பவர் எனக்கு போன் செய்து, ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 சஞ்சய்–ஐ அடித்துவிட்டதாக சொன்னார். நான் தோட்டத்திலிருந்து சஞ்சய் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, சஞ்சய்க்கு நெஞ்சிலும், கையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அவரை அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன். போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. கடந்த 27.08.2023 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில் அ.சா.1–ன் வீட்டருகே உள்ள சாலையில் அ.சா.1 இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இருவரும் கெட்ட வார்த்தையால் திட்டி, 1 ஆம் எதிரி அ.சா.1–ன் அடிவயிற்றில் எட்டி உதைத்து, கட்டையால் அ.சா.1–ன் முதுகில் அடித்தார் என்றும், 2 ஆம் எதிரி அ.சா.1–ன் முகத்தில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.10.14 17:55:42 +0530

கையால் குத்தினார் என்றும், எதிரிகள் இருவரும் சேர்ந்து அ.சா.1 ஐ பார்த்து, கொலைமிரட்டல் விடுத்ததாகவும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும், போலிசாரிடம் கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.30 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.10.14 17:55:46 +0530